

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக தலைமை அலுவலகத்தில் நேற்று (08.10.2024) மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி தலைமையில் சென்னை மற்றும் காஞ்சிபுரம் மின் பகிர்மான மண்டலங்களில் வட கிழக்கு பருவ மழையினை எதிர்கொள்ள மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் கே.நந்தகுமார், இணை மேலாண்மை இயக்குநர் (நிதி) விஷு மகாஜன் மற்றும் உயர் அலுவலர்கள் உள்ளனர்.

## உத்திரமேரூரில் புதிய கட்டிடம் திறப்பு!

காஞ்சிபுரம், அக். 9 -

காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் தொகுதி தினையாம்பூண்டி ஊராட்சியில் தாட்கோ மூலமாக கூட்டுறவு பால் உற்பத்தி நிலையத்தை காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. நேற்று முன்தினம் திறந்து வைத்தார். இதில் ஒன்றியச் செயலாளர் கெ. ஞானசேகரன் உள்ளிட்ட உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் ஒன்றியம், தினையாம்பூண்டி ஊராட்சியில் தாட்கோ மூலமாக கூட்டுறவு பால் உற்பத்தி நிலையம் திறப்பு விழா நிகழ்ச்சி நேற்று முன்தினம் (7.10.2024 ) காலை நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு தாட்கோ மேலாளர் ராஜசுதா தலைமை தாங்கினார்.

### திருப்பத்தூர் மாவட்டம்

# கந்திலி ஒன்றியத்தில் பல்வேறு திட்டப் பணிகள்!

## அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

திருப்பத்தூர், அக். 9 -

கந்திலி ஒன்றியத்திற்குப்பட்ட சு.பள்ளிப்பட்டு ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் (MGNREGS) கீழ் ரூ.23 இலட்சம் மதிப்பீட்டிலும்_புதிய பணிகள் செய்திட சட்டமன்ற உறுப்பினர் ஏ.நல்லதம்பி பணியினை துவக்கி வைத்தார்.

திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, கந்திலி ஒன்றியத்திற்குட்பட்ட சு.பள்ளிப்பட்டு ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் (MGNREGS) கீழ் டேக்கனூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளிக்கு சுற்றுசுவர் 9 இலட்சத்திலும், புதிய நியாய விலைக்கடை ரூ.14 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக அமைக்கும் பணிக்கு திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.நல்லதம்பி பணியினை துவக்கி வைத்தார்.

கந்திலி ஒன்றியத்திற்குட்பட்ட ஊராட்சி பகுதிகளில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் 6.45 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பணிகள் செய்திட சட்டமன்ற உறுப்பினர் ஏ.நல்லதம்பி பணியினை துவக்கி வைத்தார்.

திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, கந்திலி ஒன்றியத்திற்குட்பட்ட சு.பள்ளிப்பட்டு ஊராட்சியில் அண்ணாநகர் பகுதியில் புதிய ஆழ்துணை கிணறு 1.45 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக அமைக்கும் பணிக்கும், கசிநாயக்கன்பட்டி அரசுமேல் நிலைப்பள்ளியில் நுழைவாயில் 5.00 இலட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்ட பணி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.நல்லதம்பி மற்றும் நுழைவாயிலினை திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் கந்திலி ஒன்றிய செயலாளர் கே.ஏ.குணசேகரன், கே.எ. மோகன்ராஜ், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர். தசரதன், சீனிவாசன், கார்த்தி, ஊராட்சி மன்ற தலைவர் சைனம்மாள், வார்டு உறுப்பினர்கள், மாவட்ட (ம) ஒன்றிய கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், மகளிர்கள், கிளைசெயலாளர்கள், கழக முன்னோடிகள் என திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## ஒழுங்கு நடவடிக்கை

### தலைமைக் கழக அறிவிப்பு

நீலகிரி மாவட்டம், கூடலூர் நகரத்தைச் சேர்ந்த மாவட்ட பிரதிநிதி மு.மணிகண்டன், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் விமலநாதன் மற்றும் பி. ராயின் ஆகியோர் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”** | **துரைமுருகன்**
சென்னை- 600 018. | பொதுச்செயலாளர்,
நாள்: 08.10.2024. | தி.மு.க.



திருப்பத்தூர் மாவட்டம் கந்திலி ஒன்றியம் கசிநாயக்கன்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. பங்கேற்று மாணவ, மாணவியர்களுக்கு நல உதவிகளை வழங்கினார். கே.ஏ.குணசேகரன், மோகன்ராஜ், தசரதன், சீனுவாசன், கார்த்தி சைனம்மாள் உள்ளிட்டோர் உடனுள்ளனர்.

# கீழையூர் கிழக்கு ஒன்றியத்தில் 200 பேர் கழகத்தில் இணைந்தனர்!

நாகை, அக். 9 -

நாகை மாவட்டம் கீழையூர் கிழக்கு ஒன்றியம் பிரதாமராம புரம் ஊராட்சியில் உள்ள செருதூர் மீனவ கிராமம், கிடங்கு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 200 குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் கீழையூர் கிழகக்கு ஒன்றியக் கழகச் செயலாளரும், வேளாங்கண்ணி பேரூராட்சி துணைத்தலைவர் ஆ.தாமஸ் ஆல்வா எடிசன் ஏற்பாட்டில் அக் கட்சிகளில் இருந்து விலகி தி.மு.க. வில் இணையும் நிகழ்ச்சி நாகையில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற்றது. விழாவிற்கு கீழையூர் கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளரும், வேளாங்கண்ணி பேரூராட்சி துணைத் தலைவருமான ஆ.தாமஸ் ஆல்வா எடிசன் தலைமை தாங்கினார். நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து, வேளாங்கண்ணி பேரூர் செயலாளர் மரியசார்லஸ், மாவட்ட தொழிலாளர் அணி தலைவர் என்.மோகன்தாஸ், மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் பூவை ஆர்.ஜி.முருகு ஆகியோர் முன்னிலை வகித்தனர். பிரதாமராம புரம் முன்னாள் ஊராட்சி செயலாளர் இராம. கணபதி வரவேற்றார். நிகழ்ச்சியில் அ.தி.மு.க. ஓ.பன்னீர் செல்வம் அணி, அ.தி.மு.க. பாட்டாளி மக்கள் கட்சி, பா.ஜ.க. ஆகிய கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அ.தி.மு.க. ஓ.பன்னீர்செல்வம் அணியின் ஒன்றிய செயலாளர் முருகானந்தம் (எ) சண் முகநாதன், பா.ம.க. கிளை செய லாளர் மகேந்திரன், அ.தி.மு.க. கிளை துணைச் செயலாளர் என்.எல்லப்பன், அ.தி.மு.க. கிளை பொருளாளர் ஆர்.தமிழ்மணி ஆகியோர் தலைமையில் தலைமையில் 200 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் அக் கட்சிகளில் இருந்து விலகி நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர்.

கழகத்தில் இணைந்தவர்களுக்கு இரு வண்ண கைத்தறி ஆடை அணிவிக்கப்பட்டு கழகத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டது. நிகழ்ச்சியில் மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் பால.முரளி, துணை அமைப்பாளர் பி. தேவராஜ், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் குலோத்துங்கன், ஒன்றிய இளைஞர் அணி புகழேந்திரன், செருதூர் ஏ.கணபதி, பி.சுந்த ராஜ், ஒன்றிய மீனவர் அணி அமைப்பாளர் கே.சிவப்பிரகாசம், அணி துணை அமைப்பாளர் பி.சுந்தராஜ், மற்றும் பி.அர்சுணன், என்.சந்திரன், ஒன்றிய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் எம். இரத்தினகுமார், ஒன்றிய தொண்டர் அணி துணை அமைப்பாளர் எஸ்.ரஞ்சித், ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் எஸ்.மதன், கிளை கழக நிர்வாகிகள் பி.துரைராஜ், எஸ். நந்தகுமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## ஒழுங்கு நடவடிக்கை

### தலைமைக் கழக அறிவிப்பு

தஞ்சை மத்திய மாவட்டம், ஒரத்தநாடு தெற்கு ஒன்றியம், ஆம்லாப்பட்டு வடக்கு, கண்டியர் தெரு கிளையைச் சேர்ந்த முன்னாள் மாவட்ட பிரதிநிதியும், மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி முன்னாள் அமைப்பாளருமான நேதாஜி அவர்கள் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

**“அண்ணா அறிவாலயம்”** | **துரைமுருகன்**
சென்னை- 600 018. | பொதுச்செயலாளர்,
நாள்: 08.10.2024. | தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருப்பரங்குன்றம் ஆர்.கோபால்சாமி

### அக்டோபர் 9 (1992)



திருப்பரங்குன்றம் கிளைக் கழகச் செயலாளராகவும், 1965இல் திருப்பரங்குன்றம் பேரூராட்சி மன்ற உறுப்பினராகவும், 1980 முதல் 1992 வரை ஒன்றுபட்ட மதுரை மாவட்டக் கழக அவைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

1962இல் திருப்பரங்குன்றத்தில் நடைபெற்ற தி.மு.க. 3வது மாநில மாநாட்டில் சிறப்பாகப் பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம், விலைவாசி உயர்வுப் போராட்டம், ஆகிய போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

அவசரநிலையின் போது மிசா கைதியாக சிறையில் இருந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. அறிக்கை!



திருப்பத்தூர் , அக். 9 -

திருப்பத்தூர் மாவட்டச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம் இன்று (09.10.2024 - புதன் கிழமை) மாலை 4.00 மணியளவில் மின்னூர் கிராண்ட் சங்கீத்தா இல் மாவட்ட கழக அவைத் தலைவர் ஆர்.எஸ்.ஆனந்தன் தலைமையில் நடைபெறுகிறது.

அதுசமயம் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

பொருள் :

1.தமிழ்நாடு துணை முதல்வருக்கு அவர்களுக்கு பாராட்டு,

2.மாவட்ட கழகத்திற்கு வங்கி கணக்கு தொடங்குவது சம்பந்தமாக,

3.வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல்,

4.கழக ஆக்கப்பணிகள்

இவ்வாறு திருப்பத்தூர் மாவட்ட செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆரணி கோ. வெற்றிவீரன்

### அக்டோபர் 9 (2019)



1954ல் ஆரணி பேரூர்க் கழகம் துவங்கப்பட்டபோது, கழகத்தில் இணைந்து கழகப் பணியாற்ற துவங்கினார்.

மாவட்ட பிரதிநிதி, பொதுக்குழு உறுப்பினர், மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் என பொறுப்புகள் வகித்தவர்.

‘நம்நாடு’ இதழில் துணை ஆசிரியராக பணியாற்றியதோடு, முரசொலியில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதியவர்.

கருப்புக் கொடி போராட்டம், கைலாசம் கமிஷன் எரிப்பு, இந்தி திணிப்பு எதிர்ப்பு, இலங்கைத் தமிழர் ஆதரவு போராட்டம் என தலைமை அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா கபடா ராஜி (கே. ராஜி)

### அக்டோபர் 9 (2008)



திராவிடர் கழகத்தில் தந்தை பெரியாரின் சிறந்த தொண்டராக விளங்கியதால், ‘கருப்புச்சட்டை வீரர்’ என்று கழகத்தினரால் அன்பாக அழைக்கப்பட்டவர். தி.மு.க. துவக்கப்பட்டபோது, இராயபுரம் பகுதி 6வது வட்ட அவைத்தலைவராகவும், மாவட்டக் கழக பிரதிநிதியாகவும் இருந்தவர்.

1963ஆம் ஆண்டு மீனவர்கள் கடலில் திசைமாறி காணாமல் போனபோது, ராணா என்ற நேவி கப்பலில் சென்று தேடி கண்டுபிடிக்க உதவியாக இருந்தவர்.

பழவேற்காடு முதல் மாமல்லபுரம் வரை மீனவர்களுக்கு கூட்டுறவு அமைப்புகளை ஏற்படுத்தி, மீனவர் பெடரேசன் தலைவராகப் பணியாற்றியவர்.

கழகம் நடத்திய அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர். அவசரநிலையின் போது மிசா கைதியாக ஓராண்டு சிறையில் இருந்தவர்.

‘ராஜி‘ என்று அன்பொழுக தலைவர் கலைஞர் அவர்களால் அழைக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**